
கிளைட் டாம்பாக்

மற்றும் பிளானட் எக்ஸைத் தேடுதல்



எழுதியவர்: மார்கரெட் கே. வெட்டரர், புகைப்படம்: லாரி ஏ. கேபில்

மொழிபெயர்ப்பு: பூர்வ யாக்னிக் குஷ்வாஹா

கிளைட் டாம்பாக்


மற்றும் பிளானட் எக்ஸைத் தேடுதல்

எழுத்து: மார்கரெட் கே. வெட்டரர்

படம்: லாரி ஏ. கபால்

மொழிபெயர்ப்பு: பூர்வ யாக்னிக் குஷ்வாஹா

தமிழில்: சந்தோஷ் குமார்.சி



பண்டைய காலத்திலிருந்தே, புதன், வெள்ளி, செவ்வாய், வியாழன் மற்றும் சனி ஆகிய ஐந்து "அலைந்து திரியும் நட்சத்திரங்கள்" (கோள்கள்) பற்றி மக்கள் அறிந்திருந்தனர். "நிலையான நட்சத்திரங்களின்“ பின்னணியில் இவை நகர்வதை வானத்தை உற்றுநோக்குபவர்கள் கவனித்து வந்தனர். 1600-களின் தொடக்கத்தில் தொலைநோக்கி கண்டுபிடிக்கப்பட்ட பிறகு, வானியலாளர்கள் இந்த "அலைந்து திரிபவர்களின்" உண்மையான தன்மையை அறிந்துகொண்டனர்: அதாவது, இவை பூமியைப் போலவே சூரியனைச் சுற்றி வரும் கோள்கள் ஆகும்.

1781-இல், வில்லியம் ஹெர்ஷல் தொலைநோக்கியைப் பயன்படுத்தி யுரேனஸ் எனும் ஏழாவது கோளைக் கண்டறிந்தார். சூரியனைச் சுற்றி யுரேனஸ் கணிக்கப்பட்ட பாதையில் துல்லியமாகச் செல்லவில்லை என்பதை வானியலாளர்கள் விரைவில் கவனித்தனர். தொலைவில் உள்ள வேறொரு கோளின் ஈர்ப்பு விசை யுரேனஸை ஈர்த்திருக்க வேண்டும் என்று அவர்கள் கருதினர். கண்ணுக்குத் தெரியாத அந்தக் கோள் எங்கு அமைந்திருக்கக்கூடும் என்பதை வானியலாளர்கள் கணித ரீதியாகக் கண்டறிந்தனர். 1846-இல், நெப்டியூன் எனும் எட்டாவது கோள் கண்டுபிடிக்கப்பட்டது.

இருப்பினும், யுரேனஸ் மற்றும் நெப்டியூன் ஆகியவற்றின் பாதைகள் வேறெதோ ஒன்றினால் பாதிக்கப்படுவது போல் தோன்றியது. அது இன்னும் தொலைவில் உள்ள வேறொரு கோளின் ஈர்ப்பு விசையாக இருக்குமோ?





ஸ்ட்ரீட்டர் , இல்லினாய்ஸ்
ஆகஸ்ட் 1918

பௌர்ணமி நிலவு பிரகாசமாக ஒளிர்ந்துகொண்டிருந்தது.

கோடைக்கால இரவு இதமான வெப்பத்துடன் இருந்தது.

லீ மாமா, தனது சிறிய தொலைநோக்கியை

வீட்டுக்குப் பின்னால் இருந்த வயல்வெளியில்

அமைத்திருந்தார்.

பன்னிரண்டு வயதான கிளைட் காத்திருந்தார்.

அவரது பெற்றோரோ தொலைநோக்கி வழியாக இரவு

வானத்தைப் பார்த்துக் கொண்டிருந்தனர்.

இதற்கு முன் கிளைட் ஒருபோதும் தொலைநோக்கி வழியாகப்

பார்த்ததில்லை என்றாலும், அது தொலைவில் உள்ள

பொருட்களைப் பெரிதாகவும் அருகிலும் காட்டும் என்பதை

அவர் அறிந்திருந்தார்.

இறுதியில், கிளைடின் முறை வந்தது. லீ மாமா தொலைநோக்கியை நிலவை நோக்கித் திருப்ப, கிளைட் நிலவைப்பார்த்தார்.

மலைகள், பள்ளங்கள், சமவெளிகள் மற்றும் பள்ளத்தாக்குகளைக் கண்டு அவர் வியப்படைந்தார்.

அதற்கு முன்புவரை, நிலவு வானத்தில் இருந்த ஒரு சாதாரணப் பொருளாக மட்டுமே அவருக்குத் தெரிந்திருந்தது.





நிலவு உண்மையில் மற்றொரு உலகம் என்பதை இப்போது கிளைடால் காண முடிந்தது.

விண்வெளியில் வேறு என்னென்ன மர்மங்கள் ஒளிந்திருந்தன?

கிளைட் அதைப் பற்றி யோசித்தார்.

அவரது பெற்றோருக்கு அதில் ஆர்வம் குறைந்த பிறகும் கூட, கிளைடும் லீ மாமாவும் தொலைநோக்கி வழியாகப் பார்த்துக்கொண்டு, கோள்கள் மற்றும் நட்சத்திரங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர்.



கோள்கள் மற்றும் நட்சத்திரங்களைப் பற்றிய படிப்பான வானியல் குறித்த ஒரு புத்தகத்தை லீ மாமா கிளைடுக்குக் கொடுத்தார்.

கிளைடு அந்தப் புத்தகத்தை மனப்பாடம் ஆகும் அளவுக்குத் திரும்பத் திரும்பப் படித்தார். அதன்பிறகு, தமக்குக் கிடைத்த வானியல் தொடர்பான மற்ற எல்லாப் புத்தகங்களையும் அவர் படித்தார்.

விரைவிலேயே, கிளைடால் நட்சத்திரக் கூட்டங்களை (விண்மீன் தொகுப்புகளை) அடையாளம் காண முடிந்தது.

தொலைநோக்கி இல்லாமலே காணக்கூடிய ஐந்து கோள்களை அடையாளம் காண அவர் கற்றுக்கொண்டார்: புதன், வெள்ளி, செவ்வாய், வியாழன் மற்றும் சனி.

கிளைட் தனது தம்பிகளுக்கும் தங்கைக்கும் விண்மீன்களையும் கோள்களையும் சுட்டிக்காட்டினார்.

சிறிது காலத்திற்குப் பிறகு, கிளைடின் தந்தையும் லீ மாமாவும் இணைந்து பயன்படுத்துவதற்காக ஒரு புதிய தொலைநோக்கியை வாங்கினார்கள்.



கிளைட் பதினாறு வயதாக இருந்தபோது, அவரது குடும்பம் இல்லினாய்ஸிலிருந்து கன்சாஸில் உள்ள ஒரு பண்ணைக்குக் குடிபெயர்ந்தது.

அவரது மாமா லீ, வீட்டில் அனைவரும் பயன்படுத்தும் தொலைநோக்கியை தன்னுடன் எடுத்துச் செல்ல கிளைட்டை அனுமதித்தார்.

புதிய பண்ணையில் செய்ய வேண்டிய வேலைகள் நிறைய இருந்தன.

இருப்பினும், பகலில் எவ்வளவு கடினமாக உழைத்தாலும், வானம் தெளிவாக இருக்கும் இரவுகளில் கிளைட் எப்போதும் வானத்தை ஆராய்வதிலேயே நேரத்தைச் செலவிட்டார்.

உயர்நிலைப் பள்ளிக் கல்வியை முடித்தபோது, கிளைட் கல்லூரிக்குச் சென்று வானியலாளராக விரும்பினார்.

ஆனால், பண்ணை வேலைகளில் அவரது குடும்பத்திற்கு அவரது உதவி தேவைப்பட்டது.




எனவே கிளைட் தனது ஓய்வு நேரத்தில் வீட்டிலேயே படித்தார்.

வானியல் பற்றிய புத்தகங்களை கடன் வாங்கினார்.

ஆனால் அவர் உண்மையில் விரும்பியது ஒரு பெரிய, அதிக சக்திவாய்ந்த தொலைநோக்கி.

அதை வாங்குவதற்கு கிளைடிடம் பணம் இல்லை, எனவே அவர் அதை உருவாக்க முடிவு செய்தார்.





தொலைநோக்கி ஒன்றைச் செய்வதற்குத் தேவையான பொருட்களை கிளைட் வரவழைத்தார். அதில் மிக முக்கியமான பகுதி,அதன் ஆடி (mirror) ஆகும்.

ஆடியின் வளைவு மிகச் சரியாக இல்லாவிட்டால், தொலைநோக்கி வழியாகத் தெரியும் காட்சிகள் தெளிவாக இருக்காது.




கண்ணாடிக்குத் தேவையான கண்ணாடித்தகட்டைத் தேய்த்து மெருகூட்டுவதில் கிளைட் பல வாரங்களைச் செலவிட்டார். அதன் வளைவை அவர் மீண்டும் மீண்டும் சோதித்துப் பார்த்தார். ஆனால், இறுதியாக அந்தக் கண்ணாடியைத் தனது தொலைநோக்கியில் பொருத்தியபோது, கோள்களும் நட்சத்திரங்களும் மங்கலாகத் தெரிந்தன. அவர் அந்த வேலையை மீண்டும் முதலிலிருந்து தொடங்க வேண்டியிருந்தது.

கண்ணாடியின் சரியான வளைவைச் சரியானபடி சோதிக்க வெப்பநிலை மாறாமல், காற்று அசைவற்று இருக்கக்கூடிய இடம் வேண்டியிருந்தது.

ஒரு பாதாள அறையைக் கட்ட முடியுமா என்று அவர் தன் தந்தையிடம் கேட்டார்.






ஒரு கடப்பாரையையும் மண்வெட்டியையும் மட்டுமே கொண்டு, கிளைட் ஒரு பெரிய குழியைத் தோண்டினார்.

பின்னர், சில அண்டை வீட்டுக்காரர்கள் கிளைட்டிற்கும் அவரது தந்தைக்கும் நிலவறையை முடிக்க உதவினார்கள்.

புதிய நிலவறையின் குளிர்ச்சியான, அசைவற்ற காற்று, கிளைட் தனது கண்ணாடியை வடிவமைத்துச் சோதிப்பதற்கு மிகச் சரியான இடமாக இருந்தது.



மாமா லீ தனக்கு டெலஸ்கோப் அமைக்க

கிளைடுக்கு பணம் கொடுத்தார்.


வாரக்கணக்கில், கிளைட் புதிய பாதாள அறையில் கண்ணாடியை அரைத்து, பளபளப்பாக்கி சோதனை செய்தார்.

மாமா லீயின் தொலைநோக்கி சிறப்பாக இருந்தது.

பின்னர் கிளைட் தனக்கென ஒரு தொலைநோக்கியை உருவாக்கினார்.

இந்த தொலைநோக்கியின் உதவியுடன் அவர் சந்திரன் , வியாழன் , சனி மற்றும் செவ்வாய் கிரகங்களில் பல விவரங்களைக் காண முடிந்தது.

கிளைட் தான் கண்டவற்றைப் படங்களாகவும் வரைந்தார்.





உயர்நிலைப் பள்ளிக் கல்வியை முடித்து மூன்று ஆண்டுகள் கழிந்த பிறகும் கூட

கிளைட் தன் தந்தையின் பண்ணையில் வேலை செய்து கொண்டிருந்தார்.

விவசாயப் பணிகள் தற்போது நன்றாக நடந்துகொண்டிருந்தன.

விரைவில் ஓட்ஸ் அறுவடைக்கு தயாராகிக்கொண்டிருந்து.

ஓட்ஸ் அறுவடைக்குப் பிறகு பணம் வந்து கிளைட் கல்லூரியில் சேர்ந்து வானியல் படிக்கலாம்.

இறுதியில் அவரது கனவு நனவாகும்.



ஆனால் சில நாட்களுக்குப் பிறகு, கார்மேகங்கள் சூழ்ந்தன. காற்று பலமாக வீசியது. மழை கொட்டியது.

திடீரென, ஓட்ஸ் பயிரிடப்பட்டிருந்த வயலின் மீது ஆலங்கட்டி மழை பொழிந்தது. வெறும் இருபது நிமிடங்களில் புயல் ஓய்ந்தது.

ஓட்ஸ் பயிர்கள் அனைத்தும் அழிந்துபோயின. அதோடு கிளைடின் கல்லூரிக் கனவும் தகர்ந்துபோனது.





புயல் காரணமாக கிளைட் விவசாயத்தைக் கைவிட முடிவு எடுக்க வேண்டிஇருந்தது.

அவரால் கல்லூரிக்குச் செல்ல முடியவில்லை, எனினும் அவர் அறிவியல் துறையில் பணியாற்ற விரும்பினார்.

வியாழன் மற்றும் செவ்வாய் கிரகங்களை வரைந்த தனது சிறந்த ஓவியங்களை அரிசோனாவில் உள்ள லோவெல் வானாய்வகத்திற்கு அவர் அனுப்பினார்.

அங்கே யாராவது உதவக்கூடும்.



கிளைடுக்கு வந்த பதில் கடிதம் அவரை ஆச்சரியப்படுத்தியது.

அந்த வானாய்வகம் தங்கள் புதிய கேமரா தொலைநோக்கியை இயக்க ஒருவரைத் தேடிக்கொண்டிருந்தது.

வானாய்வகத்தின் இயக்குநரான டாக்டர் வி. எம். ஸ்லிஃபர், கிளைடுக்கு ஒரு வேலையை வழங்கினார்.



1929-ஆம் ஆண்டு ஜனவரி 14-ஆம் தேதி, கிளைட் அரிசோனாவிற்கு நீண்ட ரயில் பயணத்தைத் தொடங்கினார்.

ரயிலில் படுத்துச் செல்வதற்கான வசதிக்கு அவரிடம் போதுமான பணம் இல்லாததால், அவர் பயணம் முழுவதும் அமர்ந்தபடியே சென்றார்.

பயணிகள் இரவு உணவு வாங்குவதற்காக ரயில் ஒரு நகரத்தில் நின்றபோது, கிளைட் தனது அம்மா கட்டித் தந்திருந்த சாண்ட்விச்களைச் சாப்பிட்டார்.



கிளைட் தனது புதிய பயணத்தில் மகிழ்ச்சியாகவும் பதட்டமாகவும் இருந்தார். ஆனால் வெற்றி பெற உறுதியாக இருந்தார். வெற்றி பெறுவதைத் தவிர வேறு வழியில்லை. கிளைடிடம் வீட்டிற்குத் திரும்புவதற்குக் கூட பணம் இல்லை.





லோவெல் ஆய்வகம்
ஜனவரி 1929

டாக்டர் ஸ்லிஃபரும் மற்ற இரண்டு வானியலாளர்களும் கிளைடை உடனடியாகப் பணியில் அமர்த்தினர்.

கிளைடுக்கு பல பணிகள் இருந்தன.


அவர் பார்வையாளர்களுக்கு வானாய்வகத்தைச் சுற்றிக் காட்டினார்.

பனிப்புயல்களுக்குப் பிறகு, அவர் ஆய்வகத்தின் குவிமாடத்தின் மீது ஏறி பனியைத் தள்ளினார்.

கிளைடின் மிக முக்கியமான வேலை புதிய தொலைநோக்கியைப் பயன்படுத்துவதாகும்.

அதைக் கொண்டு, கிளைட் இரவு வானத்தின் படங்களை எடுப்பார்.

தெரியாத கிரகத்தைத் தேட வானியலாளர்கள் இந்தப் படங்களைப் பயன்படுத்தப் போகிறார்கள்.



பெர்சிவல் லோவெல் (Percival Lowell) என்பவர் லோவெல் வானாய்வகத்தை நிறுவியிருந்தார்.


நெப்டியூனுக்கு அப்பால் ஒரு தொலைதூரக் கோள் இருப்பதாக அவர் நம்பினார்.

அவர் அதற்கு ‘பிளானட் எக்ஸ்’ (Planet X) என்று அழைத்தார்.

பல ஆண்டுகளாக லோவெல் இந்தக் கோளைத் தேடினார்.

1916-இல் அவர் காலமானார்; அப்போதும் ‘பிளானட் எக்ஸ்’ கண்டுபிடிக்கப்படவில்லை.





இப்போது லோவெல் ஆய்வகத்தில் இருந்த வானியலாளர்களிடம் புதிய கேமரா தொலைநோக்கி இருந்தது.

அத்தொலைநோக்கி எடுத்த படங்களை ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு உதவும் ஒரு புதிய கருவியும் அவர்களிடம் இருந்தது. ‘பிளானட் எக்ஸ்’ (Planet X) கோளை இறுதியாகக் கண்டுபிடித்துவிடலாம் என்று அவர்கள் உறுதியாக நம்பினர்.

கிளைட் ஒவ்வொரு தெளிவான இரவிலும் தொலைநோக்கியைப் பயன்படுத்தி வானத்தின் ஒரு பகுதியைப் புகைப்படம் எடுத்தார்.

சில இரவுகளுக்குப் பிறகு, அவர் அதே பகுதியை மீண்டும் புகைப்படம் எடுப்பார்.

வானியலாளர்கள் இரண்டு புகைப்படங்களையும் ஒப்பிட்டுப் பார்ப்பார்கள்.




அவர்கள் ஒரு கருவியைப் பயன்படுத்தி, அந்த இரண்டு புகைப்படங்களையும் மிக வேகமாகத் திரும்பத் திரும்பக் காட்டினர்; இதனால் அவை பார்ப்பதற்கு ஒரே புகைப்படமாகத் தோன்றின.

புகைப்படங்களில் இருந்த நட்சத்திரங்கள் ஒரே இடத்தில் நிலையாக இருந்தன.

அந்த இரண்டு புகைப்படங்களும் எடுக்கப்பட்டதற்கு இடைப்பட்ட நேரத்தில் நகர்ந்திருந்த பொருட்கள் மட்டும், ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குத் தாவுவது போலத் தெரிந்தன.

அவை முன்னும் பின்னுமாகத் துடிப்பது போலத் தோன்றின.



இரவுதோறும், கிளைட் கடும் குளிரில் இருந்த தொலைநோக்கி கட்டிடத்தில், நட்சத்திரங்கள் நிறைந்த வானத்தைப் புகைப்படம் எடுப்பதில் நீண்ட நேரத்தைச் செலவிட்டார்.



வானியலாளர்கள் நாள் தோறும் கிளைடின் புகைப்படங்களில் நகரும் ஒளிப்புள்ளிகளைத் தேடினர்.

சிறுகோள்கள், வால்நட்சத்திரங்கள் மற்றும் கோள்கள் அனைத்தும் சூரியனைச் சுற்றி வருகின்றன. புகைப்படங்களில் காணப்படும் நகரும் ஒளிப்புள்ளி ஒரு சிறுகோளாகவோ அல்லது வால்நட்சத்திரமாகவோ இருக்கலாம்; அல்லது அது ‘பிளானட் எக்ஸ்’ (Planet X) ஆகவும் இருக்கலாம்.



இயந்திரம் இருந்தபோதிலும், புகைப்படங்களை ஆய்வு செய்வது மெதுவான மற்றும் கடினமான பணியாக இருந்தது. மாதங்கள் உருண்டோடின.

வானியலாளர்களுக்கு அந்தப் கோள் குறித்த எந்த அறிகுறியும் கிடைக்கவில்லை.

அவர்களுக்குச் செய்ய வேண்டிய வேறு பணிகள் இருந்தன. கிளைட் எடுத்த புகைப்படங்கள் குவிந்து கொண்டே இருந்தன, ஆனால் வானியலாளர்கள் அவற்றை ஆய்வு செய்வதை நிறுத்திவிட்டனர்.

ஜூன் மாதத்தில், தான் எடுத்த புகைப்படங்களை அந்த இயந்திரத்தைப் பயன்படுத்தி ஆய்வு செய்யுமாறு டாக்டர் ஸ்லிஃபர் கிளைடிடம் கேட்டுக்கொண்டார். கிளைடால் இதை நம்பவே முடியவில்லை.

‘பிளானட் எக்ஸ்’ (Planet X) எனும் கோளைக் கண்டுபிடிக்கும் அல்லது அது இல்லையென உறுதிப்படுத்தும் முழுப் பொறுப்பையும் டாக்டர் ஸ்லிஃபர் அவரிடமே ஒப்படைத்திருந்தார். கிளைட் உறுதியுடன் இருந்தார்; ‘பிளானட் எக்ஸ்’ உண்மையில் எங்காவது இருந்தால், அதைத் தான் கண்டுபிடித்தே தீருவது என்று அவர் தீர்மானித்திருந்தார்.



கிளைட் மிகக் குறைந்த ஓய்வுடன் இரவும் பகலும் உழைத்தார்.

இரவில், அவர் தொலைநோக்கியைப் பயன்படுத்தி வானத்தின் படங்களை எடுத்தார்.


பகலில், தான் எடுத்த புகைப்படங்களில் நகரும் ஒளிப்புள்ளிகளைத் தேடினார்.

ஒவ்வொரு புகைப்படத்திலும் பல்லாயிரக்கணக்கான சிறிய நட்சத்திரங்களின் பிம்பங்கள்—அதாவது 50,000 முதல் 400,000 வரையிலான சிறிய ஒளிப்புள்ளிகள்—இருந்தன.



கிளைட் ஒவ்வொரு புகைப்படத்தின் ஒவ்வொரு அங்குலத்தையும் சரிபார்த்து உறுதிசெய்தார்.

அவர் நகரும் ஒவ்வொரு ஒளியையும் சோதித்தார். அவர் பல சிறுகோள்களையும் ஏராளமான வால்மீன்களையும் கண்டறிந்தார், ஆனால் பிளானட் எக்ஸ்-ஐக் கண்டுபிடிக்கவில்லை.




மேலும் பல மாதங்கள் கடந்து சென்றன.


அங்கே உண்மையில் வேறொரு கிரகம் இருக்கிறதா என்று கிளைட் யோசிக்கத் தொடங்கினார்.

ஒருமுறை, அங்கு வந்திருந்த வானியலாளர் ஒருவர் கிளைட்டிடம், “இளைஞரே, நீங்கள் உங்கள் நேரத்தை வீணடிக்கிறீர்கள் என்றே எனக்குத் தோன்றுகிறது. கண்டுபிடிக்கப்பட வேண்டிய கிரகங்கள் ஏதேனும் இருந்திருந்தால், அவை எப்போதோ கண்டுபிடிக்கப்பட்டிருக்கும்,” என்று கூறினார்.

வானாய்வகத்தில் ஓராண்டுக்கும் மேலாகப் பணியாற்றியும், எட்டு மாதங்களாகத் தனியாகத் தேடியும், கிளைட் இன்னும் ‘பிளானட் எக்ஸ்’ (Planet X) கிரகத்தைக் கண்டுபிடிக்கவில்லை.

ஆனாலும், அவர் தொடர்ந்து தேடிக்கொண்டே இருந்தார்.







1930-ஆம் ஆண்டு பிப்ரவரி 18-ஆம் தேதி, கிளைடைப் பொறுத்தவரை மற்ற சாதாரண நாட்களைப் போலவே இருந்தது.

அவர் ஒரு கருவியின் உதவியுடன் இரண்டு புகைப்படங்களைப் பார்த்துக்கொண்டிருந்தார்.

அவற்றில் ஒன்று ஜனவரி 23-அன்றும், மற்றொன்று ஜனவரி 29-அன்றும் எடுக்கப்பட்டவை.

அவர் அந்தப் புகைப்படங்களைச் சிறு சிறு பகுதிகளாக உற்று நோக்கினார்.

மதியம் நான்கு மணி ஆகியும் இன்னும் அவர் முடிக்கவில்லை.

பிறகு பார்த்தார்! ஒரு சிறிய புள்ளி முன்னும் பின்னுமாக குதித்தது. அது குதித்த தூரம் மிகச்சிறியதாக இருந்ததால் அது சிறுகோள் அல்லது வால் நட்சத்திரம் அல்ல என்பது அவருக்குத் தெரியும்.

இது பிளானட் எக்ஸ் ஆக இருக்க முடியுமா?

கிளைட் ஜனவரி 21 அன்று எடுத்த மூன்றாவது

புகைப்படத்தை வெளியே எடுத்தார்.


நடுங்கும் கைகளுடன் புகைப்படத்தை பார்த்தார்.

அவர் எதிர்பார்த்த இடத்தில் ஒளிப் புள்ளி

இருந்தது.

இப்போது அவருக்கு உறுதி ஏற்பட்டது.





கிளைட் அமைதியாக இருக்க முயன்றார், ஆனால் அவறது

இதயம் வேகமாகத் துடித்துக்கொண்டிருந்தது. அவர்

தாழ்வாரத்தின் வழியாக இயக்குனரின் அலுவலகத்தை

நோக்கி நடந்தார். “டாக்டர் ஸ்லிஃபர்,” என்று கிளைட்

கூறினான், “நான் உங்கள் ‘பிளானட் எக்ஸ்’-ஐ (Planet X)

கண்டுபிடித்துவிட்டேன்.”

டாக்டர் ஸ்லிஃபரும் மற்றொரு வானியலாளரும் கிளைட் எடுத்த புகைப்படங்களைப் பார்க்க விரைந்து சென்றனர்.

அது உண்மைதான் என்பதை அவர்கள் கண்டனர். கிளைட் ‘பிளானட் எக்ஸ்’ (Planet X) எனும் கோளைக் கண்டுபிடித்திருந்தார்.

அவர் மிகுந்த உற்சாகத்தில் இருந்தார். ஆனால், அவரால் அதை யாரிடமும்—தன் பெற்றோரிடமோ அல்லது லீ மாமாவிடமோ கூட—சொல்ல முடியவில்லை.

அந்த வானியலாளர்கள் முதலில் அக்கோளின் கூடுதல் புகைப்படங்களை எடுக்க விரும்பினர். அவர்கள் அது குறித்து முழுமையான உறுதியைப் பெற விரும்பினர்.



1930-ஆம் ஆண்டு மார்ச் 13-ஆம் தேதி, ஒன்பதாவது கோள் கண்டுபிடிக்கப்பட்டதை லோவெல் வானாய்வகம் அறிவித்தது.

‘பிளானட் எக்ஸ்’ (Planet X) என்ற அந்தக் கோளுக்கு ‘புளூட்டோ’ என்று பெயரிடப்பட்டது.

உலகம் முழுவதும் இருபத்து நான்கு வயதான கிளைட் டாம்பாக் ஒரு நாயகனாகத் திகழ்ந்தார்.

அவர் ஒரு புதிய உலகத்தைக் கண்டறிந்திருந்தார்; விண்மீன்களுக்கு இடையே மறைந்திருந்த ‘பிளானட் எக்ஸ்’ கோளை அவர் கண்டுபிடித்திருந்தார்.





இறுதியில்

உண்மையில், பெர்சிவல் லோவெல் எடுத்த புகைப்படங்களில் புளூட்டோ ஏற்கனவே பதிவாகியிருந்தது. டாக்டர் ஸ்லிஃபர் மற்றும் பிறர் ஆய்வு செய்த ஆரம்பகாலப் புகைப்படங்களிலும் புளூட்டோ இடம்பெற்றிருந்தது. ஆனால், அந்த வானியலாளர்கள் அனைவரும் அந்தச் சிறிய ஒளிப்புள்ளியைக் கவனிக்கத் தவறிவிட்டனர்.

டாக்டர் கிளைட் டபிள்யூ. டாம்பாக்(Clyde W. Tombaugh) உலகப் புகழ்பெற்ற வானியலாளர், எழுத்தாளர், ஆசிரியர் மற்றும் கண்டுபிடிப்பாளர் எனச் சிறப்பானதொரு பணிவாழ்வைக் கொண்டிருந்தார். விண்வெளியில் ராக்கெட்டுகளைக் கண்காணிக்க அவரது கண்டுபிடிப்புகள் பல பயன்படுத்தப்படுகின்றன. இருப்பினும், இருபத்து நான்கு வயதான ஒரு பண்ணை இளைஞரான கிளைட், புளூட்டோவின் அந்த மங்கலான பிம்பத்தைக் கண்டறிந்ததுதான், விண்மீன்கள் மீது ஆர்வம் கொண்ட அனைவரின் மனதையும் கற்பனையையும் வெகுவாகக் கவர்ந்துள்ளது.

முக்கியமான தேதிகள்

பிப்ரவரி 4, 1906 – இல்லினாய்ஸ் மாநிலத்தின் ஸ்ட்ரீட்டரில் கிளைட் டாம்பாக் (Clyde Tombaugh) பிறந்தார்.

ஆகஸ்ட் 1918 – முதன்முறையாகத் தனது மாமா லீயின் தொலைநோக்கி வழியாகப் பார்த்தார்.

1922 – குடும்பத்துடன் கன்சாஸ் மாநிலத்திற்கு இடம்பெயர்ந்தார்.

1925 – உயர்நிலைப் பள்ளிக் கல்வியை முடித்தார்.

1926 – தனது முதல் தொலைநோக்கியை உருவாக்கினார்.

1929 – அரிசோனாவில் உள்ள லோவெல் வானாய்வகத்தில் (Lowell Observatory) பணியைத் தொடங்கினார்.

1930 – புளூட்டோவை (Planet X) கண்டுபிடித்தார்.

1932-36 – கன்சாஸ் பல்கலைக்கழகத்தில் பயின்றார்.

1934 – பாட்ரிசியா ஐரீன் எட்சனைத் திருமணம் செய்துகொண்டார்.

1936-1943 – லோவெல் வானாய்வகத்தில் பணியாற்றினார்.

1939 – கன்சாஸ் பல்கலைக்கழகத்தில் முதுகலைப் பட்டம் பெற்றார்.

1943-45 – அமெரிக்கக் கடற்படைக்கு விண்வெளி வழிசெலுத்தல் (celestial navigation) முறையைக் கற்பித்தார்.

1946-1955 – நியூ மெக்ஸிகோவின் வைட் சான்ட்ஸ் (White Sands) பகுதியில் ராக்கெட்டுகளைக் கண்காணிப்பதற்கான அமைப்புகளை உருவாக்கினார்.

1958-1973 – நியூ மெக்ஸிகோ மாநிலப் பல்கலைக்கழகத்தில் வானியல் பேராசிரியராகப் பணியாற்றினார்.

1960 – வடக்கு அரிசோனா பல்கலைக்கழகத்திடமிருந்து வானியலில் கௌரவ முனைவர் பட்டம் பெற்றார்.

1979 – பேட்ரிக் மூருடன் இணைந்து ‘அவுட் ஆஃப் தி டார்க்னஸ்: தி பிளானட் புளூட்டோ’ (Out of the Darkness: The Planet Pluto) என்ற நூலை எழுதினார்.

1979-தற்போது வரை – சொற்பொழிவுகள் ஆற்றுகிறார், எழுதுகிறார் மற்றும் வானியல் அவதானிப்புகளில் ஈடுபடுகிறார்.